ஒரு மினி சூப்பர் மார்க்கெட்டாவது வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக அமுதம் ஸ்டோர்ஸ் ஒன்று துவக்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இதல்லாமல் அங்கே ஒரு மினி சூப்பர் மார்க்கெட் ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அமுதம் அங்காடிகள் திறக்கப் படுகின்றன. மினி சூப்பர் மார்க்கெட் கூட்டுறவுத் துறையால் துவக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு

*வினு எண் 157—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக எந்த ஆண்டு நடைபெற்றது ?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு ?

(இ) மீண்டும் சமீபத்தில் முத்துக் குளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) மீனளத் துறையினுல் தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு கடைசியாக 1961-ம் ஆண்டு நடத்தப்பட்டது.

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த நிகர இலாபம் ரூ. 1,98,100.

(இ) முத்துச் சிப்பிகளைப் பற்றி இதுவரை அறியப்பட்ட வளர்ச்சி விபரங்களிலிருந்து, அண்மைக்காலத்தில் முத்துக்குளிப்பு நடத்துவதற்கான வாய்ப்பில்லை என்று தெரிகிறது.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சற்றேறக் குறைய 16 ஆண்டுகளாகியும் முத்துச் சிப்பிகள் வளர்ச்சி அடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? கடந்த ஆட்சி காலத்தில் முறைகேடாக எடுக்கப்பட்டு முத்துச் சிப்பிகள் அகற்றப்பட்டனவா? அப்படியானுல் எந்த அளவுக்கு நடத்தப் பட்டது? அப்படிப்பட்ட முறைகேடு இல்லாமல் இப்போது முத்துச் சிப்பிகள் எடுக்க, ஆய்வு நடத்தப்படுமா? முத்துச் சிப்பிகளை முறையாக எடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துச்சிப்பிகள் முழுமையாக வளர்ச்சி பெருமல் இருப்பதற்கான காரணம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனல் இப்போதைக்கு முத்துக் குளிப்பதற்குத் தேவையான அளவு முத்துக்கள் முதிர்ச்சி அடையவில்லை என்றுதான் துறையிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

திரு. ஒ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் வலம்புரி சங்கு ஒன்று கடலிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த வலம்புரிச் சங்கின் மதிப்பு 40 ஆயிரம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டதாகவும், இதை எடுத்தவருக்கு 1,000 ரூபாய் சன்மானமாகக் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருப்பதால், அதிகமான அளவில்—தகுந்த சன்மானம் கொடுத்தால் மேலும் மேலும் இப்படிப்பட்ட வலம்புரி சங்கு எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தகுந்த சன்மானம் கொடுப்பதிலுைலேயே இந்த வலம்புரிச் சங்குகள் கிடைப்பதில்லை. சாதாரண சங்குகளுக்கு 2 ரூபாய் இரண்டரை ரூபாய் என்று மீனளத்துறை விலை நிர்ணயம் செய்திருக்கிறது. ஆகவேதான் இந்த வலம்புரி சங்கு எடுத்தவருக்கு 1,000 ரூபாய் கொடுப்பது என்று இந்தத் துறை முடிவு எடுத்திருக்கிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு இருந்துவந்த உரிமை ரத்து செய்யப்பட்டிருப்பதால், அவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக மண்டபம், இராமேஸ்வரம் போன்ற இடங்களில் இந்தத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகிருர்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு குளிப்புத் தொழில் தேசியமயமாக்கப்பட்டிருப்பது நாட்டின் நலனைக் கருதித்தான். சிலர் போராட்டம் நடத்துகிருர்கள் என்பதற்காக அரசு தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக இப்படி நீங்களாகவே எழுந்து கேள்வி கேட்டால் அது முறை தாஞ ? சரி கேளுங்கள்.

திரு. க. சுப்பு : சங்கு குளிப்பதற்கு தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்டநாள் கோரிக்கைக்குப் பின்னால்தான் இந்த உரிமை கொடுக்கப்பட்டது. அந்த உரிமையை இப்போது அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வதாக இருப்பதால்தான் அந்தத் தொழிலாளர்கள் அந்த உரிமை தங்களுக்குத் தரப்படவேண்டும் என்று போராடுகிறார்கள். இந்தச் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு இதை விட்டால் வேறு வாழ வகை கிடையாது. ஆகவே இந்த உரிமையைக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20).

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தில் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சங்குகள் வாங்குவதுதான் தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறதே தவிர சங்கு குளிப்பதற்கு யார் யார் உரிமம் பெற்றிருக்கிறார்களோ, அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, வலம்புரிச் சங்கு எங்கெங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் அமைதியும், சுபீட்சமும் இருப்பதாக தமிழக மக்கள் நம்புகிறார்கள். ஆகவே இந்த வகையில் இந்த வலம்புரிச் சங்கை, தலைவர் அவர்களின் மேலே உள்ள மாடத்திலே வைத்து, இந்த அவை அமைதியாகவும், சுபீட்சமாகவும் நடைபெற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை நானும் வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐதீகத்திலே நம்பிக்கை உள்ளவர்களுக்கு இந்த நம்பிக்கை இருக்கிறது. இந்த அவையிலே உள்ள எல்லோருக்கும் இந்த நம்பிக்கை இருக்கிறதா என்பதை இனி மேல்தான் பார்க்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சங்கு குளிப்பது சம்பந்தமாக, அந்தச் சங்குகளை அரசே கூட்டுறவு முறையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால் அப்படிச் சங்குகளை விலைக்கு வாங்கும்போது, ஒவ்வொரு சங்கிற்கும் 75 பைசா அல்லது ஒரு ரூபாய் விலை குறைவாக தூத்துக்குடி, மற்றும் சில இடங்களில் கொடுப்பதாகச் சொல்லப்படுகின்றதே, அதைத் தவிர்த்து

தனியார்கள் அந்தச் சங்குகளை வாங்குவதற்குக் கொடுக்கப்படும் விலையைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் இந்தச் சங்குகளை வாங்கி, மேற்கு வங்காளத்தில் சங்கு வளையல்கள் செய்கின்ற தொழில் அதிபர்களுக்கு விற்கின்ற நேரத்தில், இரண்டேகால் அரைக்கால் சைஸை குறைந்த அளவாக வைத்து, அதற்கு மேற் பட்ட சங்குகளுக்கு 2½ ரூபாய் என்று கொடுக்கின்றார்கள். இப்போது தேசிய மயமாக்கப்பட்ட பிறகு, பல்வேறு அளவு உள்ள சங்குகளுக்கு பல்வேறு விலையை நிர்ணயம் செய்திருக்கிறார் கள். இது தவிர, தொழிலாளர்களையும், தலைவர்களையும் அழைத்துத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

திரு. ந. தனசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு குளிப்பது தேசிய மயமாக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் அரசு ஊழியர் களாக ஏற்று, அவர்களுக்கு சங்கு பாங்கு அமைப்பது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா ? அப்படி ஒன்றை அமைத்து, இந்தத் தொழிலாளர்களை வாழ வைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லு கின்ற அரிய யோசனை இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், தேசிய மயமாக்கப்பட்டாலும், சங்கு குளிப்பதற்கு உரிமம் பெற்றுள்ளவர்கள், சங்கு குளிக்கும் தொழலி லும் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஊதியத் தொகையும் கொடுக்கப்படும். இதுபோக, ஆண்டு தோறும் மீதமுள்ள லாபத்திலே ஒரு பகுதியை, இந்தச் சங்குத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி இந்தத் துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS